**INSTITUTE FOR HEALTH POLICY**

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

**PRESS RELEASE**

### திகதி வரை தடையாணை

திகதி : 16 February 2024
நேரம் : 02:00 PM Sri Lanka Time

### மேலும் தகவல்களுக்கு அணுகவும்

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at' ihp.lk

### பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள


மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at' ihp.lk Twitter: @ravirannaneliya

# இலங்கை நுகர்வோர் நம்பிக்கை:

# ஜனவரி 2024 நுகர்வோர் நம்பிக்கையில் வீழ்ச்சி தொடர்ந்தது

*IMF EFF ஒப்பந்தத்திற்குப்பின் அதிகுறைந்த மட்டத்தை அடைந்தது*

இலங்கை சுகாதார கொள்கை நிறுவனம் (IHP) தன் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின்(SLOTS) மூலம் கணிக்கும் நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்களின் ஜனவரி 2024 புதுபிப்பை இன்று வெளியிட்டது.



நுகர்வோர் நம்பிக்கையின் போக்கு தனது ஒன்பது மாத வீழ்ச்சியை தொடர்ந்தது. மட்டங்கள் 2023 மார்ச் மாத IMF EFFற்கு முன் இருந்த மட்டத்திற்கு திரும்பிவிட்டன.

பொதுமக்களுக்கு அவர்களின் தனிப்பட்ட பொருளாதார நிலை மற்றும் தேசிய பொருளாதாரம் எண்ணம் பற்றிய பரந்த அளவீடான நுகர்வோர் எண்ணம் சுட்டெண்(ICS) 5 புள்ளிகள் வீழ்ந்து 16 புள்ளிகள் ஆனது. எதிர்காலத்தைப்பற்றிய அபிப்பிராயத்தை அளவிடும் நுகர்வோர் எதிர்பார்ப்பு சுட்டெண் (ICE), 5 புள்ளிகள் வீழ்ந்து 21 புள்ளிகள் ஆனது. தற்போதைய நிலவரம் பற்றிய எண்ணத்தை அளவிடும் தற்போதைய நிலவர சுட்டெண்ணும்(ICC), 5 புள்ளிகள் வீழ்ந்து 21 புள்ளிகள் ஆனது.

தற்போதைய வாங்குதல் நிபந்தனைகள் பற்றிய கருத்துக்களும் 12ல் இருந்து 16 புள்ளிகளுக்கு குறைந்தன.

அனைத்து IHP SLOTS நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்களின் வீச்சு பூஜ்ஜியத்திலிருந்து அதிகபட்சம் 100 வரை, மேலும் மட்டம் 50ற்கு கீழ் காணப்பட்டால் நிகர நம்பிக்கையின்மை நிலையை அதாவது அவநம்பிக்கை நிலையை குறிக்கும்.

**கடந்த மாதத்தில் IHP நுகர்வோர் நம்பிக்கை அளவையில் மாற்றங்கள்**

| அளவை | ↓↑⟷ | ஜனவரி 2024 | டிசம்பர் 2023 | நவம்பர் 2023 | அக்டோபர் 2023 | செப்டம்பர் 2023 | ஆகஸ்ட் 2023 |
|---|---|---|---|---|---|---|---|
| நுகர்வோர் எண்ணம் சுட்டெண் (ICS) | ↓ 5 | **16** | **21** | 17 | 22 | 25 | 26 |
| நுகர்வோர் எதிர்பார்ப்பு சுட்டெண் (ICE) | ↓ 5 | **21** | **26** | 21 | 28 | 30 | 32 |
| தற்போதைய நிலவர சுட்டெண் (ICC) | ↓ 5 | **10** | **15** | 11 | 13 | 18 | 17 |
| தனிப்பட்ட நிதி நிலைமை (கடந்த 12 மாதம்) | ↓ 5 | **13** | **18** | 12 | 18 | 20 | 20 |
| தனிப்பட்ட நிதி நிலைமை (வரும் 12 மாதம்) | ↓ 2 | **25** | **27** | 23 | 29 | 33 | 34 |
| நாட்டின் நிலைமை (வரும் 12 மாதம்) | ↓ 7 | **12** | **19** | 16 | 24 | 26 | 23 |
| நாட்டின் நீண்டகால வாய்ப்புகள் (வரும் 5ஆ.) | ↓ 6 | **25** | **31** | 24 | 32 | 31 | 38 |
| தற்போதைய வாங்குதல் நிபந்தனைகள் | ↓ 6 | **6** | **12** | 11 | 8 | 15 | 14 |

**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு**

ஆகஸ்ட் 01, 2023–ஜன. 31, 2024 வரை SLOTS நடத்திய நடத்திய 3,227 நேர்காணல்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டன. பால்நிலை, வயது, இனம், கல்வி, துறை, மாகாணம் மற்றும் சமூகபொருளாதார நிலை ஆகியவற்றின் அடிப்படையில் தேசிய அளவில் பிரதிநிதித்துவப்படுத்துமாறு பதில்கள் எடையிடப்பட்டு மாதாந்திர மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டன.

நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்(CCI) மதிப்பீடுகள் ஜனவரி 2024ல் தொலைபேசி மூலம் நடத்தப்பட்ட 508 நேர்காணல்கள் மற்றும் அக்டோ. 21, 2021 – ஜன. 31, 2024 வரை ஆய்வு செய்யப்பட்ட 14,778 வயது வந்தவர்களின் பதில்களைக் கொண்டு மதிப்பிடப்பட்டன. பதிலளித்தவர்களின் விகிதத்தை பொருத்து சுட்டெண்களுக்கு இடையே மாதிரியின் அளவு மாறுபடும். அனைத்து சுட்டெண்களும், பாலினம், வயது, இனக்குழு மற்றும் பொருளாதார நிலை போன்ற பண்புகள் உள்பட, தேசிய சனத்தொகையை பிரதிநிதித்துவப்படுத்துமாறு சரிசெய்யப்பட்டன.

SLOTS இயங்குதளமானது, நேரடி நேர்காணல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பெரிய தேசிய தொகுதியான(Panel) பதிலளிப்பவர்கள் மற்றும் எழுமாறாக டயல் செய்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மூலம் பொதுக் கருத்து மற்றும் நல்வாழ்வு போக்குகளை தினசரி கணிப்பிடுகின்றது. சக ஆய்வாளர்கள் பலரால் மதிப்பாய்வு செய்யப்பட்ட அறிவியல் வெளியீடுகள் இந்த தரவுகளைப் பயன்படுத்துகின்றன. குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான போக்குகளை தொடர இந்த இயங்குதளத்தை பயன்படுத்துவது தொடர்பான விசாரணைகளை வரவேற்கின்றோம். தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் dalreen `at’ ihp.lk யை அனுகவும்.

## முழு அறிக்கை ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, February 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence continued to decline in January 2024”, SLOTS Report #2024-02. *Available at: https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202402.pdf*

## முன் வெளிவந்த அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்


Institute for Health Policy, January 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence improved marginally in December ’23”, SLOTS Report #2024-01. *Available at: https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202401.pdf*

Institute for Health Policy, December 2023, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence continues to decline in November”, SLOTS Report #2023-17. *Available at:* http://ihp.lk/publications/docs/SLOTSReport202317.pdf

Institute for Health Policy, November 2023, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence continued to slide in October in advance of 2023 budget”, SLOTS Report #2023-16. *Available at:* http://ihp.lk/publications/docs/SLOTSReport202316.pdf

Institute for Health Policy, October 2023, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence flat but pessimistic in September”, SLOTS Report #2023-15. *Available at:* http://ihp.lk/publications/docs/SLOTSReport202315.pdf

Institute for Health Policy, September 2023, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence drops modestly in August, but no real change”, SLOTS Report #2023-14. *Available at:* http://ihp.lk/publications/docs/SLOTSReport202314.pdf

Institute for Health Policy, March 2022, “SLOTS Consumer Confidence Survey: Methodology for tracking consumer sentiment in Sri Lanka”, SLOTS Report #2022-01. *Available at:* https://ihp.lk/publications/docs/SLOTSReport202201.pdf

## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஓர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. அனைத்து நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்கள், வயது, பாலினம், மாகாணம், துறை, சமூகபொருளாதார நிலை, இனக்குழு, மற்றும் கல்வி போன்ற பண்புகள் உள்பட தேசிய சனத்தொகையோடு பொருந்துமாறு எடையிடப்பட்டன.

## நிதியுதவி

முன்பு SLOTS ஆய்விற்கு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் நிதி வழங்கினர். தற்போதைய கள வேலைகளுக்கு நிதி IHPன் பொது நல ஆய்வு நிதி மற்றும் பிறரால் வழங்கப்படுகின்றது. ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் கருத்துகள் அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.